IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 231/2018

சாட்சி : PW1

பெயர் : சிந்தாமணி தேதி: 29-01-2024

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

பிரதிவாதியின் தகப்பனார் பெயர் பச்சமுத்து. அவர் தாரமங்கலத்தல் ஏரிகொடியில் குடியிருந்து வருகிறார். நான் குடியிருக்கும் வீட்டில் இருந்து அவர் வீட்டிற்கு 12 கி.மீ தொலைவு இருக்கும். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் 7 ஏக்கர் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் மாதம்மாள், வைத்தியலிங்கத்திடம் இருந்து பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து ஆகும். அந்த கிரயப் பத்திரத்தின் அசல் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பச்சமுத்துவின் சகோதரி மாதம்மாள் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 25 செண்டில் 15 செண்ட் நிலத்திற்கு கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. என்னுடைய கணவரும், நானும் லேவாதேவி வட்டி தொழில் செய்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ-A1 ல் பிரதிவாதியின் தகப்பனார் பச்சமுத்து மற்றும் மணிமுத்து ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். பிரதிவாதி ரூ. 7,00,000/- தான் கடன் வாங்கினார் என்றும், வட்டியோடு சேர்த்து ரூ. 10,00,000/- என்று எழுதிக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. மொத்த கிரய தொகை ரூ. 10,50,000/-பேசினோம். அதில் மீதி கிரய தொகையை கொடுப்பதற்கு 30 மாதம் காலக்கெடு ஆகும். கடனுக்காக ஏற்பட்ட பத்திரம் வா.த.சா.ஆ-A1 என்பதால் தான் 30 மாதம் காலக்கெடு போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் வங்கி கணக்கில் 03.02.2016 ல் ரூ. 21,000/-ம், 31.10.2016 ல் ரூ. 39,500/-ம், வேறொரு வங்கி கணக்கில் இருந்து என் கணவரின் வங்கி

கணக்கிற்கு ரூ. 5,500/-ம் பிரதிவாதி அனுப்பியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவரின் வங்கி ஸ்டேட்மென்ட் தாக்கல் செய்ய முடியும். வா.த.சா.ஆ-A1 கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றும், அதனால் தான் என்னுடைய கணவருக்கு பிரதிவாதி ஏப்ரல் 2018ம் வருடம் வரை வட்டி செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ-A2 வழக்கறிஞர் அறிவிப்பு 01.06.2018ல் டைப் செய்து 03.06.2018ல் அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A2 படி மீதி பணத்துடன் 07.06.2018ல் சார்பதிவாளர் அலுவலகத்தில் தயாராக இருப்பதாக அனுப்பினேன் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A2 08.06.2018ல் தான் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்டது என்று சொன்னால் ஆமாம். அதனால் தான் பிரதிவாதி முன்கூட்டியே பதில் தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியில் வீடு உள்ளது என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A1 கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்பதால் தான் அதில் வீடு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரயம் பெற்றுக்கொள்ள தயராக இருந்ததாக கூறுவது பொய்யானது என்றும், அதனால் அது சம்மந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பிரதிவாதிக்கு போன் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மாற்று பரிகாரமாக எந்த தேதியில் இருந்து வட்டி வேண்டும் என்று வழக்குரையில் குறிப்பாக கூறவில்லை என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே வட்டி பெற்றுக் கொண்டதால் தான், வட்டி பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ-A1 கடனுக்காக பெயரளவில் ஏற்படுத்தப்பட்டது என்றும், அது பிரதிவாதி சொத்தை விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.